அவர்களிடம் அனுமதி பெற்று, அதைப்பற்றி யோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

38—

சத்துணவுக் கூடம்

***58089—திரு. ஆர். சின்னசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, சரவணம்பட்டி பேரூராட்சியில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிங்காநல்லூர் தொகுதி, சரவணம்பட்டி பேரூராட்சியில் மொத்தம் நான்கு பள்ளிகள் உள்ளன. நான்கு பள்ளிகளிலும் சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி நான் 2006-ல் சட்டமன்ற உறுப்பினர் ஆனவுடன் போட்டது. மூன்று வருடம் கழித்து வந்திருக்கிறது. அதற்கு அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) இல்லை, இந்தக் கேள்வி போட்டு மூன்று வருடங்கள் ஆகிவிட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கோரிக்கை நிறைவேறியாகிவிட்டதென்றால் பேசாமல் உட்காருங்கள். வினா வரிசை எண் 39. (குறுக்கீடு) திரு. சின்னசாமி, சொல்லுங்கள், தேவையில்லாததைப் பேசக்கூடாது. தேவையானதை மட்டும் பேசுங்கள்.

2009 பிப்ரவரி 20]

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் எஸ்.எஸ். குளம் ஒன்றியத்தில் சத்துணவுக் கூடங்கள் எல்லாப் பள்ளிகளிலும் பழுதடைந்துள்ளன. அவற்றைச் சீரமைப்பதற்கு எம்.எல்.ஏ., நிதியிலிருந்து நிதி ஒதுக்க முடியாது. ஆகவே, பராமரிப்பு செய்வதற்கு நிதி ஒதுக்கித் தருவதற்குத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சின்னசாமி, நீங்கள் 2006-ல் கேள்வி கொடுத்ததாக அவைக்குத் தவறான செய்தியைக் கொடுத்திருக்கிறீர்கள். 2008-ல்தான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே தரப்படுகிற கேள்விகள் ஒவ்வொரு காலக்கட்டத்திலே அவை தொடர்ந்து நீடிக்காது. Cancel ஆகிவிடும். மறுபடியும் நீங்கள் கொடுத்த கேள்விதான் வந்திருக்கிறதே தவிர, முதலில் கொடுத்த கேள்வி நடைமுறையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சின்னசாமி, நீங்கள் 13-5-2008-ல் கேள்வி கொடுத்திருக்கிறீர்கள். 13-1-2009-ல் பதில் வந்திருக்கிறது.

வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

39—

உண்டு உறைவிடப் பள்ளி

***11623—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தொட்டமஞ்சு, தொலுபேட்டா, பெட்டமுகுலாளம், மஞ்சுகாண்டப்பள்ளி ஆகிய கிராமங்களில் உள்ள பழங்குடி மாணவ, மாணவிகளுக்கு உண்டு உறைவிடப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?